கண் வைத்திய நிபுணர் பரிசோதனை செய்து
கண்ணாடிகளைச்
சிறப்பாக கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 20 வெள்ளிக்கிழமை [06-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 10

# ஜனவரிக்குள் தீர்வு இல்லையேல் உதவிகள் முற்றாக நிறுத்தம்!

## 'ஒப்பரேஷன் கிறீன்பெல்ற்' மன்னாரில் தொடர்கிறதாம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 6

மன்னார் மாவட்டத்தில் "ஒப்பரேஷன் கிறீன்பெல்ற்" இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாக கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இலுப்பைக்குளத்துறையில் இருந்து வேப்பங்குளம் வரையான பிரதேசம் முழுவதும் புலிகளின் பிடியிலிருந்து மீட்கப்படும் வரை இந் நடவடிக்கை தொடரும் என்று திரு. முனசிங்க

(3-ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் நிறுவனங்கள் அரசுக்கு அபாயமணி!!

யாழ்ப்பாணம், நவம்பர் 6

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அடுத்த மாதம் முடிவதற்கு முன்னர் (ஜனவரிக்குள்) தீர்வு ஒன்றைக் கண்டாக வேண்டும்—

இல்லையேல் தாம் வழங்கி வரும் நிவாரண மற்றும் உதவிகளை முற்றாக நிறுத்திவிடப் போவதாக—

மேற்கு நாடுகளில் இயங்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பலவும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.

இவ்வாறு அபாயமணி அடித்துள்ள தொண்டர் நிறுவனங்களில், அமெரிக்காவின் யு. எஸ். எயிட்ஸ் [U. S. AIDS], கனேடிய சிடா [CIDA] சுவிஸ் சிடா [SIDA], நோர்வேயின் நொராட் [NORAD] ஆகியவையும் அடங்கும் என அறியவருகிறது.

வடக்கு - கிழக்கில் கடந்த ஒன்றரை வருடங்களாக தொடர்ந்து யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் நாம் வழங்கும் உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கே தொடர்ச்சியாகச் செலவு செய்யப்படுகின்றன—

இவ்வாறு நாம் உதவிகளைத் தொடர்ந்து வழங்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புனர்வாழ்வுச் செலவுக்கு மேலும் 200 கோடி ரூபா!

### தமிழர்களுக்கு எவ்வளவு?

கொழும்பு, டிச. 6

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி சேவைகளைக் கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் மேலும் 200 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்தப் பணத்தொகையை பெறுவதற்கான குறைநிரப்புப் பிரேரணை ஒன்றை புனர்வாழ்வு, புனர் நிர்மாண, சமூக நலத்துறை அமைச்சர் திரு. பி. தயாரத்ன அக்டோபர் மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அந்தப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1991 ஆம் நிதி ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட பணம் முடிவடைந்ததாலேயே அமைச்சர் மேலும் 200 கோடி ரூபாவை குறைநிரப்புத் தொகையாகப் பெற்றிருக்கிறார்.

இந்தப் பணத்தில் 199.5 கோடி ரூபாவும் பாதிக்கப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரின் உறவினர்கள் இங்கு 2 நாட்கள் தங்குவர்

விடுதலை புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 41 பொலிஸாரின் உறவினர்கள் இரண்டு நாட்களே இங்கு தங்கி இருப்பார்கள் எனத் தெரியவந்தது.

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள "குமாரி" கப்பல் எதிர்வரும் 12 ஆம் திகதி திருகோணமலை சென்று பொலிஸாரின் உறவினர்கள் சுமார் 90 பேரையும் அழைத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். நகரில் அவர்களைத் தங்கவைப்பது தொடர்பான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஓ-3)

### பத்மநாபா கொலைச் சம்பவம்:

## தமிழக அரசு அதிகாரிகளும் விரைவில் கைதாவர்?

சென்னை, டிச. 6

பத்மநாபா கொலை தொடர்பாக தமிழக அரசு அதிகாரிகள் உட்பட முக்கிய புள்ளிகள் பலர் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிய வந்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

பத்மநாபா கொலையில் தேடப்பட்ட சில சந்தேக நபர்களுக்கு அந்தப் புள்ளிகள் புகலிடம் கொடுத்தனர் என்று சொல்லப்படுகிறது.

சந்தேகநபர்கள் தப்பிச் செல்ல உதவியதற்காக அரசுப்பணியில் உள்ள இவர்கள் கைது செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

திருச்சியில் ஏராளமான ஜெலிக்னைற் வெடி மருந்துக் குச்சிகளை பொலிஸார் கைப்பற்ற இருந்த சமயம் அது குறித்து மூத்த அரசு (ஐ. ஏ. எஸ்.) அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளுக்குத் தகவல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் தமிழ்க் கிராமங்கள் அடிக்கடி சுற்றிவளைப்பு

### அப்பாவிகள் சித்திரவதை; கைது

யாழ்ப்பாணம், டிச. 6

திருகோணமலை மாவட்டம், மூதூரில் தமிழ்க் கிராமங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு, தேடுதல் நடத்தப்படுகிறது.

அங்குள்ள அப்பாவி தமிழ் மக்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படு கிறது.

கடந்த திங்கட்கிழமை கட்டைபறிச்சான், ஜி. பி. எஸ்., பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர் ஆகிய முகாம்களில் இருந்து படையினர் பல அணிகளாகச் சென்று, எட்டுக்கும் மேற்பட்ட தமிழ்க் கிராமங்களைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அந்தப் பகுதிகளில் தமிழ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். வருமாறு மாத்தயா அனுப்பிய

## கடிதம் தொண்டாவிடம் நேற்றிரவு ஒப்படைப்பு?

யாழ்ப்பாணம், டிச. 6

10 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்து அமைச்சர் தொண்டமானுக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) அனுப்பிவைத்த கடிதம் நேற்றிரவு அமைச்சரிடம் ஒப்படைக்கப்படவிருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தக் கடிதத்தை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அமைச்சரிடம் நேற்றிரவு ஒப்படைக்கவிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து கப்பலில் புறப்பட்ட அரச அதிபர், நேற்றுக் காலையில் தான் திருகோணமலையைச் சென்றடைந்தார். கப்பலில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அவரது பயணம் தாமதமானது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை அரச அதிபர் கொழும்பு போய்ச் சேர்ந்ததும் உடனடியாக அமைச்சரிடம் கடிதத்தை ஒப்படைக்க ஏற்பாடாகியிருந்தது.

அமைச்சரின் பதில் பெரும்பாலும் நாளைக்குள் இங்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் இங்கு வரும் திகதி, எந்த வழியில் வருவார், அந்த காலகட்டத்தில் சண்டை தவிர்ப்பு நிலைமை ஏற்படுத்துதல் ஆகியவை போன்ற விடயங்கள் குறித்து கொழும்பில் இருந்து நாளைக்குள் தகவல்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3)

### முச்சந்தி முரளி



ஒதுக்கின நிதியை வழங்கிற இலை எல்லாட ஆக்களை ஒதுக்கிப் போடுவினம்......!

## வடமராட்சியில் நேற்றும் கடும் விமான குண்டு வீச்சு!

வடமராட்சி, டிச. 6

வடமராட்சியில் பொலிகண்டி மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகளில் நேற்றும் ஸ்ரீலங்கா விமானப் படையினர் அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர். பொலிகண்டிப் பகுதிகளில் மூன்று தடவைகள் பொம்மர்கள் குண்டுகளை வீசின. காலை 8-30 மணிக்கு இரு பொம்மர்களும், 9 25 மணிக்கு மூன்று பொம்மர்களும், மதியம் 10-05 மணி [illegible] பொலிகண்டிப் பகுதிகளில் தாக்குதலில் ஈடுபட்டன.

குண்டுவீச்சில் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர். ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன. மருத்துவமனை ஒன்றும் சேதமானது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

### ஜி. சீ. ஈ (சாதாரண) தரப் பரீட்சை:

## வினாத்தாள்கள் இன்று யாழ். வந்து சேரும்?

எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அனேகமாக இன்று இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் வினாத்தாள்களை விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வருவர். அங்கிருந்து அவை பின்னர் கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு எடுத்துவரப்படும் — அங்கு யாழ். கல்வி அலுவலக அதிகாரியிடம் அவை கையளிக்கப்படும்.

இது இவ்வாறிருக்க, ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று பிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

(ஓ-6)

### கொழும்பு மாநகரில்

## வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் கண்டுபிடிப்பு!

கொழும்பு, டிச. 6

கொழும்பு மாநகரில் — கோட்டைப் பகுதியில் — 36 கிலோ வெடிமருந்து நிரப்பப்பட்ட நிலையில் வாகனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றிய தகவல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியானது.

நேற்று நடந்த வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் இது பற்றி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கேட்கப்பட்டது.

அது பற்றிய விவரம் எதுவும் தமக்குத் தெரியாது என்று அமைச்சர் விக்கிரமசிங்க அப்போது தெரிவித்தார்.

36 கிலோ வெடிமருந்துக

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், டிச. 6

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் கட்டுவன், வயாவிளான் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேசமயம்—

காரைநகர், ஊர்காவற்றுறை கடற்பிராந்தியங்களில் இருந்து நேற்று அதிகாலை 1 மணிக்கு கடற்படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

(ஓ-15)

### பேச்சு நடத்திய காலத்தில்

## புலிகளுக்கு அரசு ரூ. 9கோடி வழங்கியதா?

### விசாரணை நடக்கிறதாம்

கொழும்பு, டிச. 6

1990 ஆம் ஆண்டில் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்த போது 9 கோடி ரூபாவை விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு கொடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஸ்ரீ லங்காவின் கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் விசாரணை செய்து வருகிறது.

இந்தத் தகவலை "ரிவிர" என்ற சிங்கள ஏடு இன்று வெளியிட்டிருக்கிறது.

தேசிய பாதுகாப்பு சேவைகள் என்ற தலைப்பின் கீழ் இந்த ஒன்பது கோடி ரூபா விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசால் வழங்கப்பட்டதாகவும்—

நிதி அமைச்சைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் கையெழுத்திட்ட பின்னரே தலைமையகம் இந்தப் பணத்தை வழங்கியதாகவும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-ஏ)

## பிரேமா நாளை வவுனியா விஜயம்

கொழும்பு, டிச. 6

ஜனாதிபதி பிரேமதாஸவும் அவரது பாரியார் ஹேமா பிரேமதாஸவும் நாளை வவுனியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

(இ-ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பீற்றூட் விதைகள் (200 கிறாம் டின்) விற்பனைக்கு உண்டு: தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர்.

[18937]

## தவறிவிட்டது

புண்ணியன் மகிலவாணனும் ஆகிய எனது 542690534 x இலக்க அடையாள அட்டை (இல: 154, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13 எனும் முகவரியிடப்பட்டது) தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் இல: 612/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தகவல் தரவும்.

(4422]

## புதிய உயர் கல்லூரி

(NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 92**

இ. நாகரிகம்

S. அருள்நங்கை

புதிய பிரிவு ஆரம்பம்: 07-12-91 [1 மணி]

**A/L 92**

பகல் நேர

சகல பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

நிர்வாகி:

S. அருள்நங்கை.

[சி-1047]

## புதிய வகுப்புகள் (ஆண்டு 4-ஆண்டு 9)

வருடா வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் 1992 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புகள் (ஆண்டு 4 முதல் ஆண்டு 9 வரை) 07-12-91 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

புதிய கல்வி நிலையம்

219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[18938]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 31 | 21 |
| 09 | 12 |
| 1929 | 1987 |

### அமரர் க. பாக்கியநாதன்

[ஸ்ரீ கணேசன் அபன் வேர்க் உரிமையாளர், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்]

திதி: 06 — 12 — 1991

எங்கள் ஆருயிர் அப்பாவே! தங்களை நாங்கள் விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. எம் நிலையில் மாற்றங்கள் எத்தனையோ! எனினும் எம் நெஞ்சில் உங்கள் நினைவுகள் நீங்கவில்லை.

தங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி,
உறவினர்கள்.

ஸ்ரீ கணேச பவனம்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

[18868]

## ஓராண்டு நினைவஞ்சலி



இம்மைக்குள்
2 - 9 - 1933

மறுமைக்குள்
6 - 12 - 1990

### ஜோர்ஜ் அருட்பிரகாசம்

ஆண்டவர் பாதமடைந்து
ஆண்டொன்று சென்றுவிட்டது.
அழியாத ஓவியமாய் நீங்கள்
அனைவரின் இதயங்களிலும் நிலைத்திருப்பீர்.

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்."

மனைவி
ஞானசோதி - அருட்பிரகாசம்.

'ஞான வாசா',
நெல்லண்டை,
பருத்தித்துறை.

[18899]

ஓம்

## ★ திருமணம் ★

நாளது டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 11.30 மணிக்கும் நண்பகல் 1.30 மணிக்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| கொக்குவில் பொற்பதி வீதி | சாவகச்சேரி, கச்சாய் றோட் |
| திரு - திருமதி | திரு - திருமதி |
| A. C. வேலாயுதபிள்ளை | P. நவரத்தினம் |
| அவர்களின் குமாரன் | அவர்களின் குமாரத்தி |
| செல்வன் ஜெயபாலனுக்கு | செல்வி வசந்தியை |
| | [ஷிப்றா நிறுவன யாழ். கிளை முன்னாள் உத்தியோகத்தர்] |

திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர். 24 GUTRAM ROAD - EAST HAM - LONDON E6 IJR இல் உள்ள இல்லத்தில் திருமண வைபவம் நடைபெறும் என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

திரு / திருமதி
A. C. வேலாயுதபிள்ளை

திரு / திருமதி
P. நவரத்தினம்

[சி/1058]

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

### அவசர நிர்வாக சபைக் கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞானக் கழகம்
[எழிலகம் முன்பாக] யாழ்ப்பாணம்.

காலம்: 06 - 12 - 1991 (இன்று)
4 - 00 மணி

★ ஒன்றிய தீர்மானங்கள் மீறப்படும் சந்தர்ப்பங்களில், எடுக்கவுள்ள நடவடிக்கை பற்றி ஆராய்ந்து தீர்மானித்தல்.

★ கோட்ட மட்ட வரவு - செலவு கணக்குகளை (சந்தா, தியாகி திலீபன் விழா, மாவீரர் விழா) முழுமையாகப் பெறுப்பெடுத்தல் ஆகியவை முக்கியமாக ஆராயப்படும். சகல கோட்ட (7) நிர்வாகிகளும் தவறாது கலந்து கொள்ளவும்.

—பொதுச்செயலாளர்.

(18929)

## ★ வெளிவாரி பட்டப்படிப்புகள் ★

**G. A. Q.**

(யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம்)

★ எல்லாப் பாடங்களுக்குமான விரிவுரைகள் நடைபெறுகின்றன.

பொருளியல்
[புதிய 2ஆவது பிரிவு]

திரு. S. வரதராஜன் B. A. (Hons)

ஆரம்பம்: 06 — 12 — 1991 (இன்று)
மாலை 2 மணி

நிர்வாகி,
தொடர் கல்வி நிறுவனம்,
உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.

[சி 0972]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரஜனனம்:
3 - 1 - 1963



வீர மரணம்:
9 - 9 - 1991

9-9-1991 இல் மணலாறில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை

### மேஜர் - தண்டேஷ் (கனகநாயகம் குணேந்திரமோகன்)

7 12 - 1991 சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அன்னாரது வீட்டுக் கிருத்தியக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இயக்க உறுப்பினர்களை அன்புடன் அழைக்கிறோம்.

திரு திருமதி கனகநாயகம்,
சகோதரர்கள்:-
சாந்தமோகன் [நோர்வே],
சற்குணமோகன் [சுவிற்சர்லாந்து],
சௌந்தரமோகன் [சுவிற்சர்லாந்து],
ஞானேந்திரமோகன் [வீரமரணமடைந்த-
கப்டன் ரஞ்சன் லாலா],
யசோதரமோகன் [காலஞ்சென்ற பட்டதாரி-
பயிற்சி ஆசிரியர்],
சகோதரி - சுகந்தினி.

பாலேந்திரன் வீதி,
(பழைய உடையார் ஒழுங்கை)
வல்வெட்டித்துறை.

[4421]

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் விநியோகத்தராகக் கடமையாற்றி வந்த மு. ஞானசேகரம் என்பவர் எமது ஸ்தாபனத்தை விட்டு தானாகவே முன் அறிவித்தல் இன்றி விலகி விட்டார் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

வி. எஸ். பாலச்சந்திரன்,
V. S. B குறூப்.

266 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[4420]

## 125 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் மலர்ந்தது:
07-05-1969

●

விண்ணில் கலந்தது:
06-08-1991

### செல்வி யூடிற்றா சாமினி புஸ்பாகரன்

என்னவளே சாமினி
விழி குளங்களில் விதையாக விழுந்தவளே.........
நினைவுகளின் நினைவுகளில் நித்தம் நித்தம்
உன் முகம் என் நெஞ்சமதை
வாட்டி வதைக்குதம்மா
உன் கண்கள் கூறிய கவிதையை
உன் கிளி மொழிதனை
கேட்கும் காலம் தான் எப்போது.........

நீர் எம்மை பிரிந்து 125 ஆம் நாளில் உம்மை நினைவு கூர்ந்து உம் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கும்.

உன் அன்பு அத்தான்-
ம. சத்தியவான் றமேஸ்.

இல 1, 2ஆம், குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

[18932]

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 1928 | 1990 |
| 04 | 11 |
| 14 | 18 |

### அமரர் இ. இராமமூர்த்தி

(மக்கள் வங்கி தலைமைக் காரியாலயப் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

திதி: 1991 — 12 — 06

எங்கள் உயிருக்குயிரான தெய்வமே! தந்தையே! பிறரின் உதவியோ இல்லாமலே தனித்து ஆலமரமாய் எம்மைக் காத்து, வளர்த்து ஆளாக்கினீர்களே! உங்களை நினைத்திருக்கும் பொழுதெல்லாம் கண்களில் நீர் சொரிகின்றதே! அப்பா! உங்களை பிரிந்து எங்கள் உயிர் உடலில் இருக்கும் வரை தாங்கிக் கொள்ளவே முடியவில்லையே! அப்பா தெய்வமாக எங்களை காத்து ஆசீர்வதியுங்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்!

அன்பின் மனைவி, ஆருயிர்ச் செல்வங்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

வைதடி தெற்கு,
வைதடி.

(18914)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இனியேனும் உணர்வார்களா?

தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமக்குப் புரிந்து கொள்ளாதது போலக் காட்டிக் கொள்ளும் ஓர் உண்மையை இராணுவ உயர் அதிகாரி ஒருவர், தெட்டத் தெளிவாக, தக்க காரணங்களுடன் வெளிப்படுத்தி உள்ளார்.

தமிழர் பிரச்சினையை — இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இராணுவத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்தை அரசு கைவிட வேண்டும். பேச்சுக்கள் மூலம் காணப்படும் தீர்வே நிலைத்திருக்கும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் விடுதலைப் புலிகளுக்கு மக்களின் ஆதரவு உண்டு என்பதை மறந்து விடக்கூடாது — இவ்வாறு பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

இந்த உண்மை தெற்கின் அரசியல்வாதிகளுக்குத் தெரியாமலிருக்கவோ அல்லது புரியாமலிருக்கவோ நியாயமில்லை ஆனால் இராணுவத் தீர்வை முன்னிறுத்தினால் தான் இனப் பிரச்சினை முடிவில்லாமலே தொடரும், அதனைச் சாதகமாக்கித் தம் அரசியல் நடத்தலாம் என்ற சுயலாப நோக்குடனேயே இராணுவத் தீர்வின் பின்னர் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை- என்ற மந்திரத்தை அவர்கள் ஓதுகிறார்கள்!

உள்நாட்டுச் சண்டையை அரசாங்கம் தனது செயற்பாட்டினால் சர்வதேசப் பிரச்சினையாக்கி விட்டது எம்மிடம் தூரதிருஷ்டி இல்லாததால் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாம் குற்றவாளிகள் ஆக்கப்பட்டு விட்டோம். வருடக் கணக்காக யுத்தம் புரிவதால் அரசுக்குப் பாதகமான விளைவுகளே உண்டாகும் எனவும் பிரிகேடியர் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

இந்த யதார்த்த நிலையைத் தமிழர் தரப்பினர் கூறும் போது அதனைப் பொய்யெனவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்றும் கூறி நிராகரிக்கும் அரசியல்வாதிகள் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

ஒரு சிங்களவர் அதுவும் இராணுவ உயர் அதிகாரி உண்மையையும் யதார்த்த நிலையையும் கள நிலைமைகளையும் அப்பட்டமாக எடுத்து வெளிக்காட்டிய பின்னரும் சிங்களத் தலைவர்கள் தங்கள் சொந்த வழியில் - பழைய வழியில்— செல்வதற்கு நாடும் அவர்களது மக்களுமே நாசமாக முடியும்.

அரசாங்கம் சாதாரண தமிழர்களுக்கு எதிராக யுத்தம் நடத்தவில்லை என்று கூறிக் கொண்டு, எவ்வாறு பொது மக்களையே கொல்கிறது. அவர்களுக்கு உணவுப் பொருள் கிடைக்காமற் செய்கிறது என்பதையும் கூட அவர் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா போன்ற நியாய சிந்தை உள்ளோர், தமிழர்களின் பிரச்சினை அரசியல் வழியில், நியாயமான முறையில், தீர்க்கப்பட வேண்டிய தன் அவசியத்தைச் சிங்கள மக்களுக்கு உணர்த்தத் தொடங்கியிருப்பது, நல்லதோர் மாற்றத்துக்கு வழி வகுக்கும் முதற்கல் எனக் கொள்ளலாம்.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். நட்பும் பகையும் நிரந்தரமானவை அல்ல. இவை நடைமுறை உண்மைகளே!

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிச. 6

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்; பிரதம விருந்தினராக யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (த)

## ஜனவரிக்குள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் தொடர்வதற்குத் தூண்டுதலாக அமைகிறதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது—

நிவாரணத்துக்குச் செலவிடுவதற்கு ஒரு கால எல்லையும் கட்டுப்பாடும் தேவை எனக் கருதுகிறோம். எனவே 1992 ஜனவரிக்கு முன்னர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் எமது உதவிகளை முற்றாக நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்—

யுத்தத்தைத் தொடர்ந்து நிவாரணத்தையும் தொடர்வதில் அர்த்தமில்லை. புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அவற்றுக்கு மட்டுமே நாம் இனி உதவி வழங்குவோம்—

நாம் வழங்கும் கோடிக்கணக்கான பணத்தை வடக்கு-கிழக்கு மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்குச் செலவிட்டால் அவர்கள் நிரந்தர வருமானம் பெற்று ஜீவனோபாயத்தை நடத்தமுடியும். அதனையே நாம் விரும்புகிறோம்— என்றவாறு தொண்டர் நிறுவனங்கள் அரசுக்குத் தெரியப்படுத்தி இருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [அ-8]

## மூதூர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் படையினரால் பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். சில இடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டது.

சூட்டுக்கு இலக்கான மூன்று பிள்ளைகளின் தந்தையான பாக்கியதுரை அருள் என்பவர் படுகாயமடைந்தார்.

கடந்த செவ்வாயன்றும் படையினர் தேடுதலில் ஈடுபட்டனர். அப்போது குழந்தைவேல் முத்துலிங்கம், சந்திரன், மூதூரைச் சேர்ந்த நடராசா துரை ஆகியோர் படையினரால் தாக்கப்பட்டு முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## தமிழக..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்ததாகவும்—

அதை அடுத்து 10.5 தொன் எடையுள்ள அந்த வெடிமருந்துக் குச்சிகளை புலிகள் வேறிடத்துக்கு மாற்றி விட்டனர் என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [ஒ-எ]

## புனர்வாழ்வு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவும் சேதமடைந்த உடைமைகளைப் புனர் நிர்மாணம் செய்யவும் செலவிடப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகையில் பத்தில் ஒரு பங்காவது தமிழர்களின் புனர்வாழ்வுக்கும், தமிழ்ப் பிரதேசத்தின் புனரமைப்புக்கும் செலவிடப்படுமா?— என்று தமிழர் தரப்பில் சந்தேகம் எழுப்பப்படுகிறது! (அ)

சேமலாப நிதியை

# ஒய்வூதியமாக மாற்றும் திட்டம் ஒத்திவைப்பு!

தனியார்துறை ஊழியர்களின் சேமலாப நிதியை மாதாந்த ஒய்வூதியமாக மாற்றும் திட்டத்தை அரசாங்கம் ஒத்திவைத்துள்ளது. இத்தகவலை பிரதமரும், நிதி அமைச்சரும், தொழில் அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

லங்கா பொதுச் சேவைச் சங்கத்தின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே பிரதமர் அரசாங்கத்தின் புதிய முடிவை வெளியிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியை ஒய்வூதியமாக மாற்றுவதற்கான திருத்தச் சட்டம் மூலம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு திரு. ஜி. எம். பிரேமச்சந்திர தொழில் அமைச்சராக இருந்த போது முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தனியார்துறை ஊழியர்களின் தொழிற் சங்கங்கள் இத்திட்டத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன.

லங்கா பொதுச்சேவைச் சங்கத்தின் தலைவர் திரு மானிப்பொட அண்மையில் பிரதமருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், சேமலாப நிதியை ஒய்வூதியமாக மாற்றுவது தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் செயல் என்று சுட்டிக்காட்டி இருந்தார்.

இவ்வாறு மாற்றுவதற்கு முன்னர், இது குறித்து ஊழியர்களிடையே கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி இருந்தார். (அ)

# அ. அட்டை இல்லாதோரும் பரீட்சைக்குத் தோற்றலாம்

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுபவர்களில் தபாலில் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்து இன்னும் அவை கிடைக்காதவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

இவர்கள் தமது பாஸ்போர்ட், அல்லது அளவிலான 2 போட்டோ பிரதிகளை தங்களது பாடசாலை அதிபர், மற்றும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரினால் அத்தாட்சிப் படுத்தி பரீட்சையின் போது சமர்ப்பிக்கலாம்.

பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கான அடையாள அட்டைகள் பெறுதற்கு [illegible] விண்ணப்பித்தும் அவை கிடைக்கவில்லை என்று புகார் செய்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த முறை பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாமல் பரீட்சை எழுத முடியாது என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (த)

பிறப்புச் சான்றிதழ்:

# விண்ணப்பங்கள்: 15,000 ஆனால் படிவங்கள்: 3,500

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ் பெற விண்ணப்பித்த 15 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் யாழ். செயலகத்தில் தேங்கிக்கிடக்கின்றன. அதே சமயம் கொழும்பில் இருந்து சான்றிதழ் வழங்குவதற்கான 3ஆயிரத்து 500 படிவங்கள் மட்டுமே அடுத்த வாரமளவில் கப்பலில் வந்து சேரவுள்ளன.

இதனால் 12 ஆயிரத்து 500 பேருக்கு சான்றிதழ் வழங்க முடியாத நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த 15 ஆயிரம் பேருடைய விண்ணப்பங்களே தேங்கிக் கிடப்பனவாகும்.

இதேவேளை, கொழும்பில் தேங்கிக் கிடந்த 5 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகளும் அடுத்த வாரம் வரவிருக்கும் 'லிலி' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன. [ஒ-3]

# பயன்படுத்தாத வாகனங்கள் அறிவிக்க கோரிக்கை

கொழும்பு, டிச. 6

தமது வாகனங்களை 1992 இல் பயன்படுத்தாமல் வைத்திருக்க விரும்புவோர் அது பற்றிய அறிவித்தலை அனுப்பி வைக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாண சபையின் மோட்டார்போக்குவரத்துத் திணைக்களம் கோரி உள்ளது.

இது பற்றிய அறிவித்தலை உரிய படிவத்தில் அதற்கான கட்டணத் தொகையுடன் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக வடக்கு-கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் அல்லது மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்களுக்கு 25 ரூபாவும். லொறிக்கும் மற்றும் பஸ்களுக்கும் 100 ரூபாவும் ஏனைய வாகனங்களுக்கு 50 ரூபாவும் இதற்கான கட்டணமாக அறவிடப்படும். என்று மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வாகனங்களை ஆறுமாதங்களுக்கு மேல் பயன்படுத்தாது வைத்திருக்க விரும்புவோரின் அறிவித்தல் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## எம். எல். ரி. பரீட்சை விரைவில் நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 6

வைத்திய ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் (எம். எல். ரி.) பரீட்சை அடுத்த மாதம் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்தப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் கொழும்பில் செய்யப்பட்டு [illegible]

# நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை கூட்டுமாறு அனுரா கோரிக்கை

கொழும்பு, டிச. 6

சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டும்படி திரு. அனுரா பண்டார நாயக்கா கட்சியின் பிரதம கொறடா திரு. ரிச்சர்ட் பத்திரானவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

கட்சிக்குள் நிலவும் நெருக்கடி பற்றி விவாதிக்கவே இக்கூட்டத்தை கூட்டும்படி அவர் கோரியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக திரு. அனுரா பண்டாரநாயக்காவை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டு வருவதாக கட்சியின் சிரேஷ்ட எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

அனுராவை கட்சியின் பொதுச்செயலாளராக நியமிப்பது என்ற முடிவை கட்சியின் நாடாளுமன்றக் குழு முன்னரே எடுத்திருந்தது என்றும் அவர் சொன்னார். (இ-எ)

## கைலாசபதி நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிச. 6

பேராசிரியர் கைலாசபதியின் ஒன்பதாவது வருட நினைவு தினம் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும். (த)

## சைக்கிள்

யாழ்ப்பாணம், டிச. 6

அனாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சைக்கிள் ஒன்று இப்போது உதயன் அலுவலகத்தில் உள்ளது: அதன் சொந்தக்காரர் தகுந்த அடையாளங்களைத் தெரிவித்து அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## பாடகர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிச 6

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் புதிதாக உருவாக்கவுள்ள புதிய பாடல் ஒலிப்பதிவில் பாடுவதற்கு திறமையுள்ள பாடகர்கள், பாடகிகள் நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலுள்ள விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழக தலைமைச் செயலகத்தில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [த]

## மகளிருக்கான உளவியல் பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம் டிச. 6

அறவழிப் போராட்டக் குழுவின் ஆதரவில், மூன்று நாள் மகளிருக்கான உளவியல் பயிற்சிப் பாசறை, கைதடி நவீல்ட் பாடசாலையில் இன்று 6 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இன்றும், நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும் இந்தப் பயிற்சிப் பாசறைக்கு அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் திரு. க. கோபாலகிருஷ்ணன் தலைமை வகிப்பார். (இ)

## வெடிமருந்து..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வானத்தின் அடிப்பகுதியில் கட்டி வைக்கப்பட்டிருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன என்று இந்திய வானொலி அறிவித்தது.

கொழும்பு கோட்டையில் சனசந்தடி நிறைந்த "உலகச் சந்தை" (World Market) பகுதியிலேயே பழுதடைந்த நிலையில் காணப்பட்ட வாகனம் ஒன்றிலிருந்து 56 கிலோ எடையுடைய வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

கடந்த பத்து நாட்களாக அந்த வாகனம் அப்பகுதியிலே நிறுத்தப்பட்டிருந்தது என்றும்—

சார்க் உச்சி மாநாடு மீண்டும் நடக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-ர)

## சைவசித்தாந்த பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 5

மெய்கண்டதேவர் சிவஞான சைவ சித்தாந்த உயர் நிறுவனம் இலவசமாக ஏற்பாடு செய்துள்ள புதிய சைவ சித்தாந்தப் பயிற்சி நாளை மறுதினம் காலை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் தொடங்கும். (த)

## போர்க்கால விளக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 6

போர்க்கால விளக்கக் கூட்டங்கள் வடமராட்சிப் பகுதியில் இன்று இரவு எட்டு மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

கரவெட்டி வட்டப்பிரிவில் — கப்பூது ஏகாம்பர வித்தியாலய மைதானம், கலிகை கந்தசாமி கோவில் அருகாமை ஆகிய இடங்களிலும்—

பருத்தித்துறை வட்டப் பிரிவில் — மந்திகை அம்மன் கோவில் அருகாமை, புலோலி உபய கதிர்காமம் கோவில் அருகாமை ஆகியவற்றிலும் —கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன. (ஒ-8)

## ஒப்பரேஷன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் சொன்னார்;

இந்த சமயம், கிழக்கில் தொப்பிகல அடர்ந்த காட்டுப் பகுதியில் படையினர் நடத்திய "வடுடரவும" என்ற இராணுவ நடவடிக்கை முடிவடைந்து விட்டதாகவும் அவர் கூறினார். (ஒ-எ)

## வடமராட்சி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுகாயமடைந்த பொலிகண்டியைச் சேர்ந்த ஆன்ரன் மரியதாஸ் [32 வயது] மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். டாக்டர் சு. சுப்பிரமணியம் என்பவரே காயமடைந்த மற்றையவர் ஆவார்.

பொலிகண்டிப் பகுதியில் கடந்த திங்களன்றும் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன என்பது தெரிந்ததே;

வல்வையில்

வல்வெட்டித்துறை, ஊரிக்காடு மடத்தடியிலும் நேற்றுக் காலை 9-25 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டுகளை வீசின.

இங்கு ஒரு வீடு முற்றாக சேதமடைந்தது; அங்கிருந்த உடைமைகள் பல நாசமாகின. பலன்தரு மரங்கள் பலவும் முறிந்து போயின;

குண்டுவீச்சு நடந்தசமயம் வீட்டுக்காரர் மாதவும் அவரது மனைவியும் பதுங்கு குழியில் இருந்ததால், உயிர் தப்பினார். (ஒ-165-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி வெற்றிடம்

ஆண்டு 6, 7, 8 வகுப்புக்களுக்கான சகல பாடங்களும் கற்பிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் 6ஆம், 7ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி) 2 — 5 மணிக்கிடையில் விண்ணப்பப்படிவத்துடன் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

**விக்னா கல்வி நிறுவனம்,**
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

[இ-1045]



## கல்வியாண்டு-1992

ஆண்டு 5 முதல் 11 வரையிலான
வகுப்புகள்

ஆரம்பம்: 07-12-1991
சனி காலை 7 மணி

| | |
|---|---|
| கணிதம் | — இரா. அருட்செல்வம் |
| | — விவேகானந்தன் |
| விஞ்ஞானம் | — ஜே. ஆர். சூரி |
| | — சிவகுமார் |
| தமிழ் / சமயம் | — பொன்னுச்சாமி |
| | — திருக்கேதீஸ்வரன் |
| | — திருச்செல்வம் |
| | — பிரதீபன் |
| ஆங்கிலம் | — சத்தியமூர்த்தி |
| | — ஜெயனொளிபவன் |
| | — அருந்தவராஜா |
| சமூகக்கல்வி | — ராஜவரோதயம் |
| | — ராஜேந்திரன் |
| வர்த்தகம் | — சத்தியமூர்த்தி |
| | — மகேஸ் |

ஆண்டு 5க்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட வகுப்புகள் நடைபெறும்.

**பெரடெனியா இன்ஸ்ரிரியூட்** கொக்குவில். **கல்விவளர் சோலை,** கோண்டாவில்,

[18933]


## முதலாவது பிறந்ததின வாழ்த்து



## ★ சி. கோபிநாத் ★

சுதுமலை கிழக்கைச் சேர்ந்த சிவகுமார்-சறோஜாதேவி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் கோபிநாத் 6-12-1991 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் குடும்பத்தினருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அம்மப்பாமார், அம்மம்மாமார், அன்ரிமார், அண்ணா தொழில் அதிபரும், சக தொழிலாளர்களும், கவி புகைப்படப்பிடிப்பாளரும், சுதுமலை அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் துணையால் சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(18931)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 292/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 6-12-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


பட்டதாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## பட்டதாரி ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சைக்கான 2 மாத விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது அறிவு, பொது உளச்சார்பு

ஆரம்பம்: **07-12-1991** மு. ப. 10-30

★ விரிவுரைகள்:- சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 340/- (முழுப் பயிற்சிக்கும்)

பல விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

**ASTAN INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[இ-1041]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மயில்வாகனம் சுந்தரவல்லி

திருமதி மயில்வாகனம் சுந்தரவல்லி காலமானார். இவர் காலம் சென்ற ஆறுமுகம் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், குணவதி (கனடா), விஜயசுந்தரம் (வ. பி. போ. ச. கோண்டாவில்), தேவகுஞ்சரி, சாந்தநாயகி, கருணானந்தன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், கனகசபாபதி சத்தியபாமா, காலம் சென்ற துரைசிங்கம், கிருஸ்ணபாலசந்திரன் (கனடா), இந்துமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, கீதா, தேவகி, உமா, உதயசுதன், காலம் சென்ற ஸ்ரீதரன், கிருபன், ஸ்ரீபரா, கோபிகிருஸ்ணா, யசோதரா, விஜிலா, நிஷாந்தன், மதிருபன், அபிரா (கனடா), விஷ்ணு (கனடா), ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (7-12-91) அவரது மாரீசன்கூடல் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகள் குடும்பமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மாரீசன்கூடல், இளவாலை. [18623] ம. விஜயசுந்தரம் (மகன்)

## திருமதி பத்மராணி அருளானந்தம்

(Happy House Manipay)

திருமதி பத்மராணி அருளானந்தம் காலமானார். அன்னார் காலம்சென்ற திரு. அருளானந்தத்தின் மனைவியும் காலஞ்சென்ற தம்பையா, பொன்னுவின் மகளும் ஸ்ரீ பத்மானந்தா (மணமகள் பணியகம் கட்டுத்தாபனம்), சிவானந்தன் (யுனிகோன் என்ரபிறைசஸ்), இந்திரவதனி (நதி), ஜெயந்தி, வைஜயந்தி ஆகியோரின் தாயாரும் நவரட்ணராசா (வடமாகாண கடற்றொழில் கூட்டுறவுச் சமாசங்களின் சமாசம்), சச்சிதானந்தமூர்த்தி (U.K.), சிறிதரன் (சுழிபுரம்), அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஜெயராஜா, நவரட்ணம், ஜெயமணி, மகிழ்மலர், ராஜேஸ்வரி, அரியமணி, இந்திராணி, தவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரிகா, ஆதித்தன், ராதிகா, தேவிகா, சுரேன், நரேன், பிரேமேந்திரா, வைஷ்ணவி, விஷ்ணுதரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 3 மணிக்கு மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(18625) நா. நவரட்ணராஜா

## V. M. முத்தையா

நாரந்தனையைச் சேர்ந்த ஊர்காவற்றுறை முன்னைநாள் பிரபல வர்த்தகர் வி. எம். முத்தையா நேற்றுக் காலமானார். இவர் தங்கரத்தினத்தின் அருமைக் கணவரும், தனலெட்சுமி (அவுஸ்திரேலியா, முன்னைநாள் விரிவுரையாளர் — கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை), சபாநாதன் (நீம் சுரங்கமில், வவுனியா), வினோதவதி (இந்தியா), யோகேஸ்வரி (அவுஸ்திரேலியா), சண்முகநாதன் (அவுஸ்திரேலியா), திலகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இரத்தினசிங்கம் (இந்தியா) ஆனந்தபவான் (அவுஸ்திரேலியா), கிருஷ்ணா (லண்டன்), மகாதேவி, சரஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், மீனாட்சி, பொன்னம்பலம், பொன்னு, இளையபிள்ளை சாமியார் மற்றும் தம்பு, அபிராமி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று மாலை 4 மணிக்கு 45/1, அம்மன் வீதி சந்தைமடம், யாழ்ப்பாணத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
(1862[illegible]) சபாநாதன் (மகன்)


## யா/மகாஜனக் கல்லூரி, யா/யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை

## ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை-1992

1. ஆண்டு 6க்கான மாணவர் தெரிவு போட்டிப் பரீட்சை மூலம் நடைபெறும்.
2. தற்போது ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களும் 01-02-1981 இல் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்கள் ஆவர்.
3. மேற்படி கல்லூரிகளின் அலுவலகங்களில் ரூ. 45/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 13-12-1991க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
4. பரீட்சை 29-12-1991 அன்று மு. ப. 9.00 மணிக்கு அந்தந்தக் கல்லூரிகளில் நடைபெறும்.

அதிபர்கள்,
யா/மகாஜனக் கல்லூரி,
யா/யூனியன் கல்லூரி.

(இ/0982)


# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி தம்பிஐயா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நல்லதம்பி தம்பிஐயா காலமானார். இவர் காலஞ்சென்ற நல்லதம்பி பார்வதியின் அன்பு மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் மங்கையர்க்கரசி (ஜெர்மனி) சதானந்தன் (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா (ஜெர்மனி) வின் மாமனாரும், நாகம்மா, வைத்திலிங்கம், முருகேசு உடையார், சதாசிவம் ஆசிரியர், பரநிருபசிங்கம், காலஞ்சென்ற தம்பிராசா, பாலசிங்கம் கிராம சேவகர், காமாட்சி, கனகசுந்தரம் சங்கீதபூஷணம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை ஆசிரியர், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, குழந்தைவேலு மனேஜர், சரவணமுத்து, சேதிநாதன் மற்றும் கந்தப்பிள்ளை, செந்திநாதன், காமாட்சி, அமிர்தம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், முன்னாள் புகையிரத இலாகா பிரதம பொறியியலாளர் என். ஏ. வைத்திலிங்கம், என். ஏ. அம்பலவாணர் (மலேசியா) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5ம் புறாடி லேன் அரியாலையில் நேற்று நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
மு. இராமலிங்கம்
யா / கனகரத்தினம் ம. ம. வி. (18621)

## திருமதி பாக்கியலட்சுமி குமாரசாமிப்பிள்ளை

கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த திருமதி பாக்கியலட்சுமி குமாரசாமிப்பிள்ளை நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இல 23, 36 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு இல்லத்தில் நடைபெறும். அவை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
185, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். மு. மாணிக்கவாசகர் (18624)

## திரு. M. W. அழகரெட்ணம்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. M. W. அழகரெட்ணம் (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்) 5-12-91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி C. R. அழகரெட்ணம் (உசன்) அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி வேல்டன் அவர்களின் மருமகனும், ஈவா அவர்களின் அன்புக் கணவரும், சித்திரா, றஞ்சி, தர்ஷிக்கா ஆகியோரின் நேச தகப்பனாரும், காலஞ்சென்ற அன்ரன் ராஜசேகரன், ஜெயம், ராஜரெட்ணம் ஆகியோரின் மாமனாரும், குயின்ரன், நேசல் ஆகியோரின் ஆசைப் பேரனும், சரோஜினி வின்சோ, சந்திரா ரெட்ணவேல், றாஜா ராஜசுந்தரம் ஆகியோரின் பிரிய சகோதரனும், திருமதி G. E. S. செல்லையா, காலஞ்சென்ற பரமேஸ், Dr. மனோ பேரின்பநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (6-12-91) பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரி. யோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
ஈவா அழகரெட்ணம்.

46, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (18622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org